NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 25 April 2020

# 16,000 பட்டதாரிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் தொடர்கல்வி பயிற்சிப் பாடங்கள்

அடுத்த மாதம் முதல் இங்குள்ள ஆறு தன்னாட்சிப் பல்கலைக்கழகங்கள் தங்களின் பட்டதாரி மாணவர்கள் தொடர்ந்து பயில்வதற்காக நான்கு தொடர்கல்வி மற்றும் பயிற்சிப் பாடங்களை (சிஇடி) இலவசமாக வழங்கவுள்ளன. பட்டதாரிகள் வெவ்வேறு தொழில்துறைகளில் கூடுதல் வாய்ப்புகளைப் பெற்றிட இத்திட்டம் கைகொடுக்கும் என்று கல்வி அமைச்சும் ஆறு பல்கலைக்கழகங்களும் நேற்று வெளியிட்ட கூட்டு அறிக்கையில் தெரிவித்திருந்தன.

"நிச்சயமற்ற பொருளியல் சூழலைக் கருதி, புதிதாக பட்டம் பெற்றவர்கள் தங்களின் கற்றலைத் தொடர விரும்பலாம். அவர்களின் பல்கலைக்கழக நாட்களில் பெற்ற தகுதிநிலையை மேம்படுத்திக் கொள்ள கூடுதல் திறன்களைக் கற்க ஆசைப்படலாம். இதற்கு இத்திட்டம் உதவும்," என அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. சிங்கப்பூரர் மற்றும் நிரந்தரவாசியான முழுநேர பல்கலைக்கழக மாணவர்கள் இத்திட்டம் மூலம் பலனடைவர். அத்துடன் அவர்கள் இவ்வாண்டு பட்டக் கல்வியை முடித்திருக்க வேண்டும்.

மேல்நிலை இயந்திரவியல், தரவு பகுப்பாய்வு, தரவு அறிவியல், நிதி போன்ற பலதரப்பட்ட துறைகள் சார்ந்த கிட்டத்தட்ட 1,700 'சிஇடி' பாடங்களிலிருந்து மாணவர்கள் தேர்வு செய்யலாம். 'ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்' அமைப்பு ஒவ்வொரு பாடத்திற்கும் 70% கட்டணச் சலுகையை வழங்குகிறது. மீதம் 30% பல்கலைக்கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இத்துடன் வேலை தேடுவதன் தொடர்பில் பட்டதாரிகள் தங்களின் பல்கலைக்கழக வாழ்க்கைத்தொழில் அலுவலகங்களின் ஆதரவைப் பெறுவர் என்றது கல்வி அமைச்சு.

"வேலைச் சந்தை வலுவற்ற நிலையில் இருக்கும் வேளையில் நம் தன்னாட்சி பல்கலைக்கழகங்களின் இறுதியாண்டு மாணவர்கள் தங்களின் பட்டக் கல்வியை முடிக்கிறார்கள். இந்நிலையில் கல்வி அமைச்சும் பல்கலைக்கழகங்களும் உங்களுக்கு முழு ஆதரவு தரும் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன்," என கல்வி அமைச்சர் ஓங் யி காங் நேற்று தம் ஃபேஸ்புக் பதிவு ஒன்றில் நம்பிக்கையளித்திருந்தார்.

தாங்கள் பயின்ற துறைக்குத் தொடர்பில்லாததாக இருந்தாலும் 'சிஇடி' பாடங்களைப் பயிலுமாறு பட்டதாரிகளை ஊக்குவித்தார் திரு ஓங். இதன் மூலம் மாணவர்கள் தங்களின் திறன்களை விரிவுபடுத்திக்கொள்ள முடியும் என்றார்.

மேலும், துறைக்குத் தேவையான திறன்களையும் நிபுணத்துவ கட்டமைப்புகளையும் மாணவர்கள் வளர்த்துக்கொள்ள வேலைப்பயிற்சித் திட்டங்களையும் பரிசீலிக்குமாறு அமைச்சர் ஓங் கேட்டுக்கொண்டார்.

மனிதவள அமைச்சும் 'வொர்க்ஃபோர்ஸ் சிங்கப்பூர்' அமைப்பும் இணைந்து தொடங்கியுள்ள திட்டம் ஒன்றின் மூலம் புதிதாகப் பட்டம் பெறுவோரில் 8,000 பேருக்குச் சம்பளத்துடன் கூடிய வேலைப்பயிற்சி வாய்ப்புகள் கிடைக்கும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.